KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 1, No. 02 (2016) 1

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts01022016.01

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கவி கா.மு. ஷெரீபும் உரைநடைப் படைப்புகளும்

Poet Ka.Mu. Sheriff and His Prose Works

Dr. U. Alibava[1,*iD]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com
ORCID iD: Dr. U. Alibava https://orcid.org/0000-0002-2051-7002

ARTICLE INFO

Article history
Received: 10 April 2016
Revised: 15 April 2016
Accepted: 20 April 2016

Article ID
KIJTS-2026-0017

Peer review
Double-blind peer review

Keywords
Ka. Mu. Sheriff
Tamil Prose
Tamil Literature
Seerapuranam
Silappathikaram
Historical Writings
Literary Research
Social Reform
Islamic Tamil Literature.

ABSTRACT

Poet Ka. Mu. Sheriff was a distinguished literary personality who made significant contributions to Tamil literature through his multifaceted literary creations and social activities. Although he was widely recognised as a poet, his literary achievements extended beyond poetry into various genres, including dramas, short stories, novels, literary essays, letters, travelogues, historical writings, political works, commentaries, and research publications. This article examines the life, literary contributions, and particularly the prose works of Ka. Mu. Sheriff. It highlights his intellectual depth, linguistic proficiency, historical awareness, social consciousness, and commitment to the Tamil language and culture. Special attention is given to his commentaries on Umaru Pulavar's Seerapuranam and the Pukar Kandam of Silappathikaram, which demonstrate his interpretative skills and profound understanding of classical Tamil literature. His historical and research works, including Vallal Seethakathi Varalaru, reveal his scholarly engagement with Tamil and Islamic literary traditions. Furthermore, his writings reflect his concerns for social reform, religious harmony, national consciousness, and human values. His contributions to journalism through periodicals such as Oli, Tamil Muzhakkam, and Saattai also played an important role in creating social and political awareness. The article establishes that Ka. Mu. Sheriff's prose works constitute a significant dimension of his literary legacy and deserve greater recognition in the history of modern Tamil literature.

How to cite this article: Dr. U. Alibava (2026). கவி கா.மு. ஷெரீபும் உரைநடைப் படைப்புகளும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *1*(02). https://doi.org/10.63300/kijts01022016.01
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024

Email : alibavapkm@gmail.com

https://orcid.org/0000-0002-2051-7002

கவி கா.மு. ஷெரீப் நாடறிந்த கவிஞர். அவர் கவிதை மட்டுமன்றி நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், இலக்கியக் கட்டுரைகள், கடிதம், பயணநூல், வரலாற்று நூற்கள், அரசியல் நூற்கள், உரை நூற்கள், ஆராய்ச்சி நூற்கள், இதழியல் பணிகள் எனப் பல தளங்களிலும் பங்காற்றியுள்ளார். நாடறிந்த நாவலராகவும் திகழ்ந்துள்ளார். நேர்த்திமிகு அரசியல்வாதியாகவும் இருந்துள்ளார்.

வாழ்க்கைக் குறிப்புகள்

திருவாரூர் மாவட்டத்திலுள்ள அபிவிர்த்தீஸ்வரம் என்னும் ஊரில் 11.09.1914 அன்று பிறந்த கவி கா. மு. ஷெரீபின் பெற்றோர் காதர்ஷா ராவுத்தர், முகம்மது இப்றாஹிம் பாத்தும்மாள் ஆகியோராவர். கவிஞரின் பூர்வீக ஊர் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள குழந்தை விநாயகர் கோட்டை.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அவர் பள்ளி சென்று படிக்கவில்லை. தம் தாய் தந்தையரிடம் சொந்த முயற்சியினால் கல்வி கற்றுப் பின்னாளில் நாடு போற்றும் நல்லறிஞராக உயர்ந்தார்.

பல்வேறு போராட்டங்களைத் தம் வாழ்நாள் முழுவதும் முன்னின்று நடத்திய கவிஞர் வெள்ளையர் காலம் முதல் காங்கிரஸ் ஆட்சிக் காலம் வரை பல முறை சிறை சென்றுள்ளார்.

பதினைந்து வயதிலேயே அரசியலில் ஈடுபட்ட கவி கா.மு. ஷெரீப் சமுதாயச் சீர்திருத்தப் பணிகள் பலவற்றை மேற்கொண்டார். இந்தி எதிர்ப்புப் போராட்டம், இந்திய சுதந்திரப் போராட்டம், மன்னர் ஆட்சி ஒழிப்பு, தமிழக எல்லை மீட்சி, புதிய தமிழக அமைப்பு, தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பயிற்சி மொழி, தலைநகர்க் காப்பு, தமிழகப் பெயர் அமைப்பு, பாரதி பாடல் தேசிய மயமாக்குதல், நாடக வரிச் சட்ட நீக்கம், திராவிட நாடு, தட்சிண ராஜ்ய எதிர்ப்பு, தொழிலாளர் போராட்டம் எனத் தம் வாழ்நாள் முழுவதும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதுடன் அவற்றை முன்னின்றும் நடத்தினார். தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு மிகுந்தவராய்ச் செயலுமாற்றினார்.

திருமணம்

தம்முடைய 19ஆம் வயதில் திருமணம் செய்து கொண்ட கவிஞர் ஒன்றிற்குப் பின் ஒன்றாக மூன்று பெண்களை மணந்தார். 1934 இல் முகம்மது பீவியை மணந்தார். பின்னர் அவர் மறைந்தார். 1940 ஆம் ஆண்டு ஜமீலா பீவியை மணந்தார். 1945 ஆம் ஆண்டு இராவியாகனி நாச்சியாரை மணந்தார்.

குழந்தைகள்

எட்டு ஆண் மக்களையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்த அவர் இரண்டு பெண் குழந்தைகளை வளர்த்தார். ஒரு ஆண் குழந்தையை வளர்த்தார். அனைவரையும் சேர்த்து அவருடைய குழந்தைச் செல்வங்கள் பன்னிருவர் ஆவர்.

தொழில்கள்

இளம் வயது முதல் பல்வேறு தொழில்களைச் செய்து வந்த கவிஞர் வாழ்நாள் முழுவதும் வசதியின்றியே வாழ்ந்தார். ஆரம்பநாட்களில் சிறுகடை குமஸ்தாவாக இருந்தார்; விவசாயப் பணிகளில் ஈடுபட்டார். பின்னர் பத்திரிக்கை ஆசிரியர் பணியிலிருந்தார். நூலாசிரியர், நாடக ஆசிரியர், திரையிசைப் பாடலாசிரியர், வசன கர்த்தா எனப் பல்வேறு பணிகளைப் புரிந்த கவிஞர் தம்முடைய நிரந்தரத் தொழிலாக எழுத்தையே வைத்திருந்தார்.

நடத்திய ஏடுகள்

பத்திரிக்கைத் துறையில் சிறந்து விளங்கிய கவிஞர், 'ஒளி', 'தமிழ் முழக்கம்', 'சாட்டை' எனும் திங்கள், திங்கள் இருமுறை, கிழமை ஏடுகளை நடத்தினார். காலத்திற்கேற்ற தலையங்கங்களை எழுதி மக்களுக்கு விழிப்புணர்வூட்டினார். அன்றைய ஆட்சியாளர்களுக்கும் அறிவூட்டினார்.

கவிஞர் பெற்ற பட்டங்களும் பாராட்டுகளும்

கவிஞர் தம் வாழ்நாள் முழுவதும் பல்வேறு பட்டங்களையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். அவற்றுள் செந்தமிழ்ச் செல்வர், கவிரத்னம், கவித்தென்றல், கவிக்குரிசில், மகாகவி, திருவருட்கவிச் செல்வர், கலைமாமணி, டாக்டர் (இலக்கியக் கலாநிதி), கவிஞர் திலகம், கவிச்செல்வம், மனிதநேய மாமணி ஆகியன குறிப்பிடத்தக்கன.

1964 ஆம் ஆண்டு மேயர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தமிழின மக்கள் சார்பாக, ரூ 10000/- பொற்கிழி வழங்கப்பட்டுக் கவிஞர் கௌரவிக்கப்பட்டார்.

தமிழ் இயல் இசை நாடக மன்றம் (ஸ்டேட் அகாடமி) 'தாயுமானவர்' நாடகத்திற்காக ரூ. 1500 /- பொற்கிழி வழங்கிக் கவிஞரைக் கௌரவித்தது.

தமிழக அரசு கவிஞருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பித்தது. தமிழக அரசு 1970 ஆம் ஆண்டு கவிஞருக்குக் கலைமாமணி விருது வழங்கியது. தேசிய எழுத்தாளர்கள் பாராட்டினையும் கவிஞர் பெற்றார்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஐந்தாம் மாநாட்டில் கவிஞரின் தமிழ் இலக்கியச் சேவையைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கப்பட்டது.

தமிழக இயல், இசை, நாடக மன்றம் ஈப்போ (மலேசியா) தமிழர் சார்பிலும் பினாங்கு (மலேயா) தமிழர் சார்பிலும் கவிஞருக்குப் பொற்பதக்கங்கள் வழங்கப்பட்டன

சென்னை முத்தமிழ் மன்றம் கவிஞருக்குப் பொற்பதக்கம் வழங்கியது. துபாய் - சார்ஜா தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் பொற்கணையாழி வழங்கிக் கவிஞரைக் கௌரவப் படுத்தியது.

பல்லாற்றானும் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் சேவையாற்றிய கவிஞர் பெருமகனார் 07.07.1994 அன்று சென்னையில் தம்

இன்னுயிரை நீத்தார். தமிழ் உணர்வாளர்களும் இலக்கிய நெஞ்சத்தினரும் திரையுலகத்தினரும் கலங்கித் தவித்தனர்.

இயற்றிய நூல்கள்

கவிதை

ஒளி, இன்றைய சமுதாயம், அமுதக் கலசம், நபியே எங்கள் நாயகமே (சதக முறைக் காவியம்), இறையருள் வேட்டல், ஆன்ம கீதம், நீங்களும் பாடலாம் இசைப் பாடல்கள், மச்சகந்தி எனும் குறுங்காவியம், ஆயிசா நாச்சியார் பிள்ளைத் தமிழ்(சிற்றிலக்கியம்), கலைஞர் 63, கவி கா.மு. ஷெரீப் கவிதைகள், களப்பாட்டு ஆகிய கவிதை நூல்களைக் கவி கா.மு. ஷெரீப் இயற்றியுள்ளார்.

நாடகம்

புதுயுகம், மன்னவன் காதலி, பாசம் தந்த பரிசு, புலவர் புகழேந்தி ஆகிய நாடகங்கள் நடித்து நூலாக்கம் பெற்றவை. தாயுமானவர், பொற்கொடி ஆகிய இரு நாடகங்களும் நடித்து நூலாக்கம் பெறாதவை.

சிறுகதைகள்

காதலும் கடமையும், காதல் வேண்டாம், கனகாம்பரம் ஆகிய சிறுகதை நூல்களைக் கவிஞர் இயற்றியுள்ளார்.

புதினங்கள்

நல்ல மனைவி, விதியை வெல்வோம், தஞ்சை இளவரசி ஆகிய புதினங்களையும் கவிஞர் படைத்துள்ளார்.

இலக்கியக் கட்டுரைகள்

கண்ணகியின் கனவு, விபீஷணன் வெளியேற்றம், சீறாப்புராணச் சொற்பொழிவுகள் ஆகிய இலக்கியக் கட்டுரை நூல்களையும் கவிஞர் வெளியிட்டுள்ளார்.

கடித முறை நூற்கள்

மகளே கேள், அய்யாவின் கடிதங்கள் ஆகிய இரண்டு கடித முறை நூற்களையும் கவிஞர் வெளியிட்டுள்ளார்.

பயண நூல்

கவிஞர் தாம் மேற்கொண்ட மலேசியப் பயண அனுபவத்தைக் கட்டுரைகளாக்கிப் பத்திரிக்கைகளில் வெளியிட்டுள்ளார். அவற்றை எல்லாம் தொகுத்துக் ‘கிழக்கில் உள்ள பிறைக்கொடி நாடு’ எனும் தலைப்பில் கவிஞர் நூலாக்கியுள்ளார்.

வரலாற்று நூல்

வரலாறு நூல் படைப்பதிலும் கவிஞர் தணியாத ஆர்வம் உடையவராகத் திகழ்ந்திருக்கிறார். வள்ளல் சீதக்காதி, பத்ர்ப் போரின் பின் விளைவுகள் ஆகிய

வரலாற்று நூல்களைக் கவிஞர் படைத்துள்ளார். இந்நூல்களில் கவிஞரின் வரலாற்றுத்திறம் புலப்படுகிறது.

அரசியல்

சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் தொடக்ககால அரசியல் தலைவர்களுள் முன்னணித் தலைவராகத் திகழ்ந்தவர் கவி கா.மு. ஷெரீப் ஆவார். அதனால் அரசியல் சார்ந்தும் எழுதிக் கவிஞர் விழிப்புணர்வூட்டியுள்ளார். 'தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?', 'தமிழரசில் முஸ்லீம்கள்', 'முஸ்லீம் லீக் தேவைதானா?, பத்திரிக்கைத் தலையங்கங்கள் ஆகிய நூல்கள் கவிஞரின் அரசியல் விழிப்புணர்வுக் கருத்துக்கள் அடங்கிய நூல்களாகத் திகழ்கின்றன.

உரை நூல்கள்

இஸ்லாமியப் பெருங்காப்பியமான உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்திற்குக் கவிஞர் அற்புதமான உரைகளை வரைந்துள்ளார். அவை நுபுவத்துக் காண்டத்திற்கு நான்கு பாகங்கள், கிசுறத்துக் காண்டத்திற்கு ஐந்து பாகங்கள், விலாதத்துக் காண்டத்திற்கு ஒரு பாகம் எனப் பத்துப் பாகங்களாக வெளிவந்துள்ளன. சீறாப்புராணத்திற்கு மட்டுமன்றித் தமிழின் தலைமைக் காப்பியமான சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்திற்கும் கவிஞர் குறிப்பிடத்தக்க உரையினை வரைந்துள்ளார்.

ஆராய்ச்சி நூற்கள்

கவிஞர் மிகச்சிறந்த ஆய்வறிஞராகவும் திகழ்கிறார். அவருடைய ஆய்வுக்கூர்மையை 'இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?', 'இஸ்லாமும் ஜீவகாருண்யமும்', 'இறைவனுக்காக வாழ்வது எப்படி?', 'பொதுச் சிவில் சட்டம் பொருந்துமா?' ஆகிய நூல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

கவிஞரின் படைப்புகளுள் கவிதை நூற்கள் தவிரப் பிற அனைத்தும் உரைநடை நூல்களாகத் திகழ்கின்றன.

கவிஞரைப் பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

"பல்வேறு அரசியல் பணிகளுக்கிடையே இலக்கியப் பணியையும் விடாது செய்துள்ள கவிஞர் பெருமகனின் தொண்டு போற்றிப் பாராட்டுதற்குரியது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் கரைகண்ட கவிஞர் பெருமகனார் தமிழ் இலக்கியம் முழுவதையுமே கற்றுணர்ந்தவர். தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சீறாவிற்கு இனிய உரை காணும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள கவிஞர் பெருமகனார் இத்தகைய இலக்கியக் கட்டுரைகளையும் தொடர்ந்து எழுதிவந்தால் தமிழ்த்தாய்க்கு இவர் செய்யும் பெருந்தொண்டாக அமையும். இனிய, எளிய, படிப்பதற்குச் சுவைமிகும் வகையில் பல்துறைக் கட்டுரைகளைப் படைத்துள்ள கவிஞர் பெருமகனாரின் இலக்கியத் தொண்டு நீடினிது ஓங்குக"(கா.மு. ஷெரீப், கண்ணகியின் கனவு, அணிந்துரை, ப.எ.இ.) என்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொது மேலாளர் இரா. முத்துக் குமாரசாமி குறிப்பிடுகிறார்.

“தமிழகத்தின் முன்னணிக் கவிஞர் வரிசையில் நாட்டுப் பற்றார்வத்துடன், சமதரும சமுதாய ஆக்க ஆர்வமும் குழைத்து ஊட்டும் தமிழ்க்கவி வாணராகக் கவிஞர் கா.மு. செரீப்பைத் தமிழகம் நன்கு அறியும். அத்துடன் அவர் தேசியக்கவிஞர் பாரதி, பாரதிதாசனைப் போலத் தேசத் தொண்டராகவும், சொற்பொழிவாளராகவும், தமிழார்வலராகவும் மக்களிடையே பீடுநடை போட்டு வருபவர் ஆவார். ஆனால், கவிதையேயன்றி வேறு இருபெருந்துறைகளிலும் அவர் குறிப்பிடத்தக்க சிறந்த சாதனை செய்துள்ளார்” (கா.மு. ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, திறனாய்வு முன்னுரை, ப.எ.இ.) என்றும் “கவிஞர் கா.மு. செரீப் கவிஞர் என்ற முறையில் உமறுப் புலவர் மரபில் வந்து, பாரதி - பாரதிதாசன் மரபில் உலவுபவர். திறனாய்வாளர் என்ற முறையிலும் அவர் முன்மரபும் நம்மரபும் இணைந்து வருங்காலம் நோக்கி நடைபோடுபவரே. ஆனால், வரலாற்றுத் துறையிலும் ஆராய்ச்சித்துறையிலும், சிறப்பாகத் தமிழ்மரபு, இசுலாமிய மரபு, தமிழ் இசுலாமிய மரபு ஆகியவற்றின் ஆராய்ச்சித் துறையிலும் அவர் ஒரு கலங்கரைவிளக்கமாய் (திருவள்ளுவர் சுட்டிய அறிதொரும் அறியாமை என்ற எல்லையிலா ஆராய்ச்சிப் பேரறிவுக் கடலில்) வருங்கால ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டுபவர் ஆவார். அவரது ஆன்ற தமிழறிவும், ஊன்றிய தமிழ் மரபிழைவும், அகன்ற பண்பாய்வுத் திறனும் அவரை அந்நாளைய வள்ளல் சீதக்காதி போன்றே இந்நாளைய தமிழர்க்கு ஓர் கருவூல மாக்குவதாகும்” (கா.மு. ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, திறனாய்வு முன்னுரை, ப.எ.இ.) என்றும் கா. அப்பாத்துரைப்பிள்ளை பாராட்டுகிறார்.

“கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்களை முப்பதாண்டுகளாக அறியும் பேறு பெற்றவன் அடியேன். தமிழரசுக் கழகத்தார்கள் என்ற அடிப்படையில் அரும்பிய எங்கள் நட்பு. போதாகிப் பூத்து மலர்ந்துள்ளது. அம்மலரின் மணமே இவ்வெழுத்து, கவிஞர் கா.மு ஷெரிப் அவர்கட்கும் எனக்கும் உள்ள உறவு ஒரு சிறிய தந்தைக்கும் மகனுக்கும் உள்ள சீரிய உறவு என்றால் மிகையாகாது. இந்து - முஸ்லிம் உறவு ஒருசிறு நெருக்கடிக்கு உரியதாகியுள்ள இந்நாளிலும் இதை அழுத்திச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இது போல் உறவுடைய இந்து - முஸ்லிம்கள் ஏராளம் ஏராளம். மதத்தில் ஒன்றாகாமலேயே மனத்தில் ஒன்றாகி இருத்தலே மாண்பு. இஸ்லாமை - நபிகள் நாயகத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள எளியேனுக்கும் கண்கொடுத்த கருணையாளர் கவிஞர் கா.மு. ஷெரிப். அதனால் அவர்க்கு அடியேன் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்” (கா.மு. ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, வணக்கவுரை, ப.எ.இ.) என்று “சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் ந. சஞ்சீவி போற்றுகிறார்.

“இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்று வருகிறது. கருத்தரங்குகளும், மாநாடுகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித் துறை இயங்கி வருகின்றது. திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் தமிழ் முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் உமறுப்புலவர்' சிறப்புப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றது. ஆராய்ச்சிகள்

நடைபெற்று வருகின்றன. இவ்வினிய சூழ்நிலையில் கலைமாமணி கவி கா.மு. சரீபு 'வள்ளல் சீதக்காதி வரலாறு' எனும் புதியதொரு அரிய ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ளார். கவிஞர் ஆராய்ச்சி அறிஞராக இருப்பது அரிது; எழுத்தாளர் இனிய சொற்பொழிவாளராக இருப்பதும் அரிது. ஆனால் நம் கலைமாமணி நாடறிந்த நல்ல பாவலராகவும் நாவலராகவும் ஆராய்ச்சி அறிஞராகவும் திகழ்கின்றார்கள்" (கா. மு. ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, சான்றுரை, ப.எ.இ.) என்று திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் மேனாள் முதல்வர் சி. நயினார்முகமது குறிப்பிடுகிறார்.

கவி கா. மு. ஷெரீப் நாடறிந்த கவிஞர். அவர் கவிதை மட்டுமன்றி நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், இலக்கியக் கட்டுரைகள், கடிதம், பயணநூல், வரலாறு, அரசியல், உரைகள், ஆராய்ச்சி, இதழியல் எனப் பல தளங்களிலும் பங்காற்றியுள்ளார். நாடறிந்த நாவலராகவும் திகழ்ந்துள்ளார். நேர்த்திமிகு அரசியல்வாதியாகவும் இருந்துள்ளார். தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு இலக்கிய வகைமகளிலும் இலக்கியப் படைப்புகளைப் படைத்துள்ள கவிஞரைக் குறித்தும் கவிஞரின் படைப்புகளைக் குறித்தும் தமிழ் இலக்கிய உலகில் சிறந்து விளங்கியுள்ள அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

பதினைந்து வயதிலேயே அரசியலில் ஈடுபட்ட கவி கா.மு. ஷெரீப் சமுதாயச் சீர்திருத்தப் பணிகள் பலவற்றை மேற்கொண்டார். இந்தி எதிர்ப்புப் போராட்டம், இந்திய சுதந்திரப் போராட்டம், மன்னர் ஆட்சி ஒழிப்பு, தமிழக எல்லை மீட்சி, புதிய தமிழக அமைப்பு, தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பயிற்சி மொழி, தலைநகர்க் காப்பு, தமிழகப் பெயர் தலைப்பு, பாரதி பாடல் தேசிய மயமாக்குதல், நாடக வரிச் சட்ட நீக்கம், திராவிட நாடு, தட்சிண ராஜ்ய எதிர்ப்பு, தொழிலாளர் போராட்டம் எனத் தம் வாழ்நாள் முழுவதும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதுடன் அவற்றை முன்னின்றும் நடத்தினார். தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு மிகுந்தவராய்ச் செயலுமாற்றினார்.

பத்திரிக்கைத் துறையில் சிறந்து விளங்கிய கவிஞர், 'ஒளி', 'தமிழ் முழக்கம்', 'சாட்டை' எனும் திங்கள், திங்கள் இருமுறை, கிழமை ஏடுகளை நடத்தினார். எல்லாவற்றிலும் மிகு புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

துணைநூற்பட்டியல்

References

காமு. ஷெரீப், கண்ணகியின் கனவு, அபிராமி நிலையம், 307, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : டிசம்பர் 1985.

மேலது., விபீஷணன் வெளியேற்றம், தமிழ் முழக்கம் பதிப்பகம், 21, பச்சையப்ப செட்டித்தெரு, எல்லிஸ் ரோடு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1991

மேலது., வானொலியில் சீறாப்புராணச் சொற்பொழிவு, சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : டிசம்பர்1980.

மேலது., கிழக்கில் உள்ள பிறைக்கொடி நாடு, சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : செப்டம்பர் 1986.

மேலது., பத்ர் போரின் பின் விளைவுகள், சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை : 600 002, முதற்பதிப்பு : மார்ச் 1991.

மேலது., முஸ்லீம் லீக் தேவைதானா?, தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை - 600 002, முதற்பதிப்பு : டிசம்பர் 1992.

மேலது., தமிழரின் சமய நெறி, தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை - 600 002, முதற்பதிப்பு : டிசம்பர் 1992.

மேலது., இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?, கலாம் பதிப்பகம், 6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி, மைலாப்பூர், சென்னை - 600 004, முதற்பதிப்பு : பிப்ரவரி 1985.

மேலது., இஸ்லாமும் ஜீவகாருண்யமும், சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : மார்ச் 1988.

மேலது., இறைவனுக்காக வாழ்வது எப்படி?, கலாம் பதிப்பகம், 6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி, மைலாப்பூர், சென்னை - 600 004, முதற்பதிப்பு : ஜூன் 1989.

மேலது., பொதுச்சிவில் சட்டம் பொருந்துமா?, சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : பிப்ரவரி 1985.

மேலது., சிந்திக்க, தெளிவுபெற..., கலாம் பதிப்பகம், 6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி, மைலாப்பூர், சென்னை - 600 004, முதற்பதிப்பு : ஜூலை 1993.

மேலது., வள்ளல் சீதக்காதி வரலாறு, சீதக்காதி நூல் வெளியீட்டகம், 21, பச்சையப்பச் செட்டித்தெரு, சென்னை - 600 002, முதற்பதிப்பு : செப்டம்பர் 1981.